THIRU K. VINAYAKAM : Sir, what is the attitude of this Government towards the Indian System of Medicine generally? Have the Government recognised this as a branch of study worth to be pursued. Alsa, are the Government aware of the fact that this System of Medicine is not a scientifically codified system and a lot of research will have to be done and if so, what are the steps which the Government have taken either to appoint a Director or to do research work? Also, whether the treatment through this kind of medicine has borne any fruit and what are the results available with the Government?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : All these aspects are under the consideration of the Government?

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து ஒன்றியத்தின் மூலமாகவும், நகராட்சிகளின் மூலமாகவும் இனிமேல் ஏற்படுத்தக்கூடிய சிறிய வைத்திய ஆஸ்பத்திரிகளில் சித்த வைத்திய முறைதான் இருக்கவேண்டுமென்று கட்டளை போடப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. என். சங்கரய்யா : ஐயா, இன்று இந்த சித்த வைத்தியர்களும் அதே போல் அவர்கள் மருந்துகள் தயாரிப்பதற்கான மூலப் பொருள்களும் நல்ல முறையில் கிடைக்கவில்லையென்று சொல்லப்படுகிறது. அரசாங்கம் இதற்கென்று ஒரு தனி இயக்குநர் ஏற்படுத்தியதற்குப் பிறகாவது இந்திய வைத்திய முறையிலே தயாரிக்கப்பட்ட மருந்துகளை நியாயமான முறையில் தயாரித்து மக்கள் நம்பிக்கையோடு வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

Buses within Municipal limit

* 321 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to allow the Municipalities to ply town buses within the Municipal areas; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம். நகராட்சி எல்லைக்குள் பேருந்துகள் ஓட்டுவதற்கான அனுமதி கேட்டு ஒரு நகராட்சி மன்றத்தின் வேண்டுகோள் வந்துள்ளது.

(இ) அது அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state whether any step has been taken by this Government to amend the District Municipalities Act to provide for the municipalities running this bus service within their jurisdiction?

1968 மார்ச் 25]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கேள்வியினுடைய விடை யிலேயே அரசாங்கத்தினுடைய ஆலோசனையில் உள்ளது என்று பதில் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. நா. காசிராமன் : சார், எவ்வளவுதான் ஓவர்லோடு ஏற்றியும் கூட டவுன் சர்விஸ்கள் நஷ்டத்திலே தான் ஓடிக்கொண் டிருக்கிறது என்று சென்னை நகர டவுன் சர்விஸ்கள் மூலமாக நிரூபணமாகியிருக்கிறது. ஏற்கனவே நலிவுற்ற பொருளாதார நிலையிலே இருக்கிற நககரசபைகளிடம் இதைக் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு நஷ்டத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக, சர்க்காரே அதை ஏற்று நடத்த முன் வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நகராட்சிகள் பேருந்துகளை நடத்தினல் நட்டம் வரும் என்ற கனம் உறுப்பினருடைய கருத்தும் அந்த ஆலோசனையிலே பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU T. MARTIN : Mr. Deputy Speaker, Sir, the Hon. Minister has stated that only one Municipality has so far sent in an application praying for such a request. May I request the Hon. Minister to mention the name of the Municipality which has sent in such an application?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : காஞ்சீபுரம் நகராட்சி யிலிருந்து அப்படிப்பட்ட விண்ணப்பம் வந்துள்ளது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், நகராட்சிகள் அப்படிப்பட்ட பஸ்களை நடத்தலாம் என்று சொல்கிறார்கள். அதைப் போலவே பஞ்சாயத்து யூனியன்களும் விரும்பினல் அந்தப் பகுதியிலே இருக்கிற பஸ்களை ஏற்று நடத்துவதற்கு அரசாங்கம் பர்மிட் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நகராட்சிகள்பற்றிய முடிவை எடுத்தபிறகு அவசியமானல் இதுபற்றியும் பரிசீலிக்கப் படும்.

Anti-Hindi agitation by students

* 306 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state the circumstances under which the two students were killed in a bus accident near Coimbatore during the second week of January 1968?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 12—1—1968-ல் மேட்டுப்பாளையம், காரமடை உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சுமார் 150 பேர்கள், பினூர் ரோட்டிலுள்ள காரமடையிலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலுள்ள தையனூர் கிராமத்திற்குச் சென்று, ஓடிக்கொண்டிருந்த வாகனங்களை நிறுத்தி, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி செய்தனர். தனியார் வாகனம் (பஸ்) ஒன்றை நிறுத்த அவர்கள் முயற்சி செய்தனர். மாணவர்களைத் தவிர்க்க,